பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 13 புதன்கிழமை (29 09 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 305

# சங்கத்தானையில் 'புக்காரா' தாக்கு!

# பதுங்குகுழி இடிந்து 20 பேர் மரணம்!!

## நேற்று மாலை பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 29

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று மாலை 'புக்காரா' நடத்திய தாக்குதலில் மரக்காலை ஒன்றிலிருந்த பதுங்கு குழி இடிந்து மண்ணினால் மூடுண்டது. அதற்குள் தஞ்சமடைந்திருந்த இருபது பொதுமக்கள் உயிரிழந்தனர். படுகாயமுற்ற நால்வர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

சங்கத்தானை சாரதா வீதியில் (இரண்டாம் ஒழுங்குத் தெருவில்) நேற்று மாலை 5.30 மணிக்கு இந்த பரிதாபச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று மாலை 5 30 மணியளவில் வந்த இரு புக்காரா விமானங்கள் சாவகச்சேரி டச்சு வீதி மற்றும் சங்கத்தானை பகுதிகளின் மேல் வட்டமிட்டு குடியிருப்புக்கள் மீது மூர்க்கத்தனமான குண்டு வீச்சினை நடத்தின.

சாவகச்சேரி டச்சு வீதியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சி பகுதியிலிருந்து படையினர் முன்னேற முயற்சி!

### தென்மராட்சியில் பரவலாக விமான, ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 29

நேற்று அதிகாலை இயக்கச்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கடும் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேற முயன்றனர்.

அவர்களுக்கு உதவியாக இரு ஹெலிக்கொப்டர்களும் பலத்த தாக்குதலில் ஈடுபட்டன.

முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நேற்று மாலை வரை மிகக் கடுமையான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை —

நேற்று அதிகாலை 6 மணி தொடக்கம் ஆனையிறவில் உள்ள இராணுவத்தினர் தென்மராட்சியின் பல பகுதிகளையும் நோக்கி பரவலான ஷெல் தாக்குதல்களை நடத்தினர் கடும் மழையின் மத்தியிலும் தாக்குதல் மாலை வரை தொடர்ந்தது.

புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி, முகமாலை, கெற்பலி, பண்டிதர் குடியிருப்பு, பளை ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

(6ஆம் பக்கம் பார்க்க)

# நந்தாவில் அம்மன் கோயில் மண்டபத்தில்

# தஞ்சமடைந்த மக்கள் மீது குண்டு வீச்சு!

## மூன்று பெண்கள் உடல் சிதறிப் பலி

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 29

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலுக்கு முன்பாக நேற்று முற்பகல் 11 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப்படையின் சியாமாசெட்டி விமானங்கள் கண்மூடித்தனமாக குண்டு வீச்சு நடத்தியதில் மூன்று பெண்மணிகள் உடல்சிதறிப் பலியானார்கள்; 18 பேர் காயமடைந்தனர்.

விமானங்கள் வட்டமிட்டு கதிகலங்க வைத்ததை அடுத்து பாதுகாப்புத் தேடி கோவிலுக்கு ஓடிய பொதுமக்களே — கோவில் முன் மண்டபத்தில் இருந்த போது — குண்டு வீச்சுக்கு இலக்கானினர்.

கோவில் வளவில் கூட்டமாக நின்ற மக்களை நோக்கி இரண்டு தடவைகள் குண்டுகள் வீசப்பட்டன.

முதலில் வீசப்பட்ட குண்டு ஆலயத்தின் முன்புறத்தில் இருந்த அரச மரத்தின் மீது விழுந்து வெடித்துச் சிதறிய போதே உயிரிழப்புகள் ஏற்பட்டதோடு பலர் படுகாயமடைந்தனர்.

விமானக் குண்டு வீச்சால் ஆலயமும், தேரும், தேர்க் கொட்டகை, தேர் முட்டி ஆகியவையும் அருகிலிருந்த சனசமூக நிலையம் மற்றும் பாலர் பாடசாலை என்பனவும் சேதமடைந்தன.

இரண்டாவது குண்டு அருகிலிருந்த வளவு ஒன்றில் வீழ்ந்து வெடித்ததில் தென்னை மரங்களும் வாழை மரங்களும் சேதமடைந்தன,

குண்டுவீசுவதற்காக விமானங்கள் குத்திப் பதிய முயன்ற போது தரையிலிருந்து புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இதனால் உயரத்திலிருந்தவாறே கண் மூடித்தனமான குண்டுவீச்சில் விமானங்கள் ஈடுபட்டன.

குண்டு வீச்சில் உயிரிழந்த மூன்று பேரின் விவரமும் வருமாறு:-

★ பொன்னுத்துரை [illegible] (வயது 50) —

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 18 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 29

கொக்குவிலில் இடம்பெற்ற குண்டு வீச்சில் காயமுற்ற பொதுமக்களின் விவரம் வருமாறு:-

★ புஷேந்திரன் குகன் (வயது 18) — கொக்குவில் கிழக்கு.

★ எம். ஜெயமலர் (வயது 25,— தெல்லிப்பளையிலிருந்து இடம்பெயர்ந்து இணுவிலில் வசிப்பவர். சேதமுற்ற பாலர் பாடசாலை ஆசிரியைகளில் ஒருவர்.

★ சரவணமுத்து அமிர்தலிங்கம் (வயது 65) — பெரியவிளானில் இருந்து இடம் பெயர்ந்தனர். — இவரின் மனைவி குண்டு வீச்சில் உயிரிழந்துள்ளார்.

★ குருநாதி சதிரேச (வயது 72) — வசாவிளானிலிருந்து இடம்பெயர்ந்தவர்.

★ மார்க்கண்டு பொன்னம்பலம் (வயது 55) — வாழ்: அந்திரடி.

★ வீரசக்தி தங்கராசா (வயது 61) — மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தவர்.

★ இளகுரு செல்லத்துரை (வயது 75) — நந்தாவில்.

★ செல்லர் கதிரவேலு (வயது 50) — கொக்குவில்.

★ அருணாசலம் தம்பித்துரை (வயது 50, — கொக்குவில் கிழக்கு.

★ வி. பரமசாமி (வயது 57) — உரும்பராய்.

★ இளையவி மெராசா

(2 ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸ் காவல் நிலையம் மூதூரில் தாக்கி அழிப்பு!

## 3 பொலீஸார் பலி; ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் ஸ்ரீலங்கா பொலிஸ் காவல் நிலையம் ஒன்று விடுதலைப் புலிகளால் நேற்றுத் தாக்கி அழிக்கப் பட்டது.

மூதூர் இலுப்பைச்சோலை காவல் நிலையம் மீது நேற்று அதிகாலை 12-40 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப் பட்டது.

இத்தாக்குதலை அடுத்து பொலிஸ் காவல் நிலையம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது: இதனைத் தொடர்ந்து காவல் நிலையத்தை விடுதலைப் புலிகள் முற்றாகத் தாக்கி அழித்தனர்.

இத்தாக்குதலில் 3 பொலிஸார் கொல்லப்பட்டனர்— என வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினர்.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. பெரும் தொகையான ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர். (உ-எ-த-6)

## யாழ்., கிளிநொச்சிக்கும் ஊரடங்கு விஸ்தரிப்பு

நேற்று முன்தினம் காலையில் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்த ஸ்ரீலங்கா அரசு, அதனை நேற்றுக் காலை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தது

இந்த மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக [illegible] இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதாலேயே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது. (உ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## யாழ். மாவட்டம்
# முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான சிட்டைப் புத்தகங்கள் எமது செயலகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் உள்ள தேவையான நிறுவனங்கள் முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

இல. 19 செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(இ 6155)

## யாழ்ப்பாணம் வர்த்தகர் சரண்

யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் யூரியா உரத்தை எடுத்துச் செல்ல முயற்சித்தமைக்காகத் தேடப்பட்டு வந்த தமிழ் வர்த்தகர் நேற்று பொலீஸில் சரணடைந்தார் என அறிவிக்கப்பட்டது.

அமோனியா உரத்துடன் பத்து தொன் யூரியா உரத்தையும் சேர்த்து கப்பல் மூலம் கொண்டு செல்வதற்கு இவர் முயற்சித்ததாகக் கூறப்படுவது தெரிந்ததே.

இது தொடர்பாகத் தேடப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் நேற்று கொழும்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் சரணடைந்ததாக பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "லங்காதீப" செய்தி வெளியிட்டது. (அ)

# மூதூர் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

மூதூர் பொலீஸ் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ரி 56 ரக துப்பாக்கி | — | 1 |
| மகசின்கள் | — | 14 |
| 303 ரக துப்பாக்கிகள் | — | 9 |
| ரவைகள் | — | 9 |
| எல். 84 ரக மகசின்கள் | — | 1 |
| ஏ. கே. ஹோல்டர்கள் | — | 6 |
| ஜே. ஆர். கைக்குண்டுகள் | — | 6 |
| வெளிச்சக் குண்டுகள் | — | 4 |
| 303 ரக ஷெல் | — | 1 |
| நடுத்தர ரவைகள் | — | 5,515 |
| 303 ரவைகள் | — | 100 |
| ஜெனரேற்றர் | — | 1 |
| ரீ செட் | — | 16 |
| [illegible] | — | 86 |
| சீருடைகள் | — | 13 |
| கத்திகள் | — | 2 |
| ஒயில் கான் | — | 1 |
| விசில்கள் | — | 10 |
| பொலீஸ் சீருடை | — | 81 சோடி |
| பொலீஸ் சீருடை துணி | — | 17 யார் |
| தொலை நோக்கி | — | 1 |
| புகைப்படக் கருவி | — | 1 |
| தொலைத் தொடர்பு சாதனம் | — | 1 |
| தொலை தொடர்பு சாதன பற்றரி சார்ஜர் | — | 1 |
| ராணுவ இடுப்பு பட்டி | — | 11 |
| தலைக் கவசங்கள் | — | 8 |
| ராணுவ தொப்பிகள் | — | 9 |
| ராணுவ [illegible] | — | 1 |
| காற்சட்டை | — | 1 |
| ராணுவச் சப்பாத்து | — | 85 சோடி |
| சாதாரண சப்பாத்து | — | 81 சோடி |
| குளிர் தாங்கும் தொப்பிகள் | — | 24 |
| பொலீஸ் தொப்பிகள் | — | 4 |
| டேம் செக் | — | 1 |
| றேடியோ | — | 1 |
| பொலீஸ் தடிகள் | — | 9 |

மற்றும் 5,565 ரூபா 50 சதம். (உ-த)

## பாதுகாப்பு செலவுக்கு ரூ 3,600 கோடி

கொழும்பு, செப். 29

1994 ஆம் ஆண்டின் பாதுகாப்புச் செலவுக்கு 3 ஆயிரத்து 600 கோடி ரூபாவை ஒதுக்க அரசு தீர்மானித்திருக்கிறது.

இது நடப்பாண்டுக்கான பாதுகாப்புச் செலவை விட ஆயிரத்து 300 கோடி ரூபா அதிகமாகும். (உ-6)

## இன்று

யாழ். இந்துக் கல்லூரி கியோக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள கொலரா நோய்த் தடுப்பு தொடர்பான கருத்தரங்கு இன்று புதன் காலை 8 மணிக்கு ஆனைப்பந்தி சந்தியில் இயங்கும் புதிய உயர் கல்லூரி பாடசாலையிலும், 10 மணிக்கு மின்சார ஒழுங்கை பாடசாலையிலும் நடைபெறும்.

○ ● ○

யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமையில் "அரசியல் அமைப்பு ஆய்வு — இந்திய மாதிரி" என்ற தலைப்பில் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். கே. சண்முகநாதன் ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார். (அ)

## காணவில்லை

உரும்பிராயை வதிவிடமாகக் கொண்ட குமார் என அழைக்கப்படும் குமாரவேல்சிங்கம் என்பவர் 23-09-93 இல் காணாமல் போய் விட்டார். இவர் கடைசியாக மண்நிற காற்சட்டையும், சாம்பல் நிற சேர்ட்டும் அணிந்திருந்தார். 18 வயதுடைய இவர் கறுப்பு நிறமும் சுமார் 4 அடி உயரமுமானவர். இவரைக் கண்டால் தயவு செய்து உடனடியாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அல்லது கோப்பாய் காவல் துறைக்கு தகவல் கொடுக்கவும்.

த. எ. ஆ. அமிர்தராஜா
"வளர் மதி"
முத்து வீதி,
உரும்பிராய்.

(87469)

# மின்னல் தாக்கி சிறுமி பலி
## முகமாலையில் சம்பவம்

தென்மராட்சி, செப். 29

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் மீது மின்னல் தாக்கியதில் ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி அந்த இடத்திலேயே பலியானாள். அச்சிறுமியின் சகோதரி காயங்களுக்குள்ளானாள்.

நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு முகமாலை போந்தர் குடியிருப்பில் நடைபெற்ற இச்சம்பவத்தில் தமிழரசா கவர்ணா என்ற சிறுமியே பலியானாள். படுகாயமுற்ற — சகோதரியான — சக்தி (வயது 11) யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

(உ-15 117)

## 18 பேர் காயம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 46) — கொண்டாவில்.

★ பொன்னம்பலம் சின்னத்தம்பி (வயது 65) — கொக்குவில் இழக்கு.

★ செல்லர் இராசலிங்கம் (வயது 69) — கொக்குவில் இழக்கு.

★ ஐயாத்துரை தங்கம்மா (வயது 69) — கொக்குவில்.

★ சந்திரமதி நிருத்தேவி (வயது 45) — பொற்பதி வீதி.

★ வேலேஸ்வரன் தர்ஷினி (வயது 30) — [illegible]. இவள் வயது வந்த குழந்தையுடன் காயமடைந்துள்ளார். இவர் வயிற்றிலிருந்த குழந்தை தெய்வாதீனமாக உயிர்தப்பியது.

★ கிரேசன் (வயது 4), திருஞானமூர்த்தி ரவிராஜ் (வயது 5) — இருவரும் இவர் பாடசாலை மாணவர்கள்

## யாழ்ப்பாணக் கல்லூரி
# பட்டப் படிப்புக்கள் பிரிவு

இல. 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

வாரநாள் விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

★ G.A.Q - 1994 யாழ். பல்கலைக் கழகம்
★ BA Part-I, 1994 யாழ். பல்கலைக் கழகம்
★ BA Part-II, 1994 யாழ். பல்கலைக் கழகம்
★ BA - 1994 ஏப்ரல் பேராதனைப் பல்கலைக் கழகம்

★ பொருளியல் — திரு. ஆ. குமாரவேல்
★ இந்துநாகரிகம் — கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
★ மெய்யியல் — திரு. வே. புஷ்பாலசிங்கம்
★ அரசறிவியல் — திரு. ச. சகாயசீலன்
★ தமிழ் — திரு. பொ. அருந்தவநாதன்
★ கிறிஸ்தவ நாகரிகம் — வண. ஆ. ஜெயக்குமாரன்
★ ஆங்கில இலக்கியம் — திரு. க. சோமசுந்தரம்
(English Literature)

## ★ G.S.Q பேராதனைப் பல்கலைக் கழகம்

(தூயகணிதம், பிரயோக கணிதம், புள்ளி விபரவியல், பொருளியல்)

- ஆசியாவிலேயே தரம்மிக்க நூலக வசதிகளுடன்
- வெளிவாரிப் பல்கலைக் கழகமாக இயங்குகின்றது
- பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

விரிவுரையாளர், மாணவர்கள் கலந்துரையாடல்
(02—10—93 சனிக்கிழமை 10.00 மணிக்கு)

(இ/6157) — பதிவாளர் —

# அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம்
## மாதாந்த இசை நிகழ்ச்சி

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி ஆதரவில்

இடம்:-
மன்றக்கலாமண்டபம், சட்டநாதர்வீதி, நல்லூர்

காலம்:-
30-09-1993 வியாழன் மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00 — 5.45 வயலின்

பிரம்மஸ்ரீ ம. தாணுநாதசர்மா — வயலின்
திரு. எஸ். துரைராஜா — மிருதங்கம்
திரு. எஸ். கமலகாசன் — கடம்

5.45 — 6.45 இசைக்கச்சேரி

செல்வி விஜயலக்ஷ்மி இராமலிங்கஜயர் — பாட்டு
திரு. எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. எஸ். துரைராஜா — மிருதங்கம்
திரு. எஸ். கமலதாஸ் — கடம்

6.45 — 7.15 மங்கள விளக்கேற்றல்

1. திரு. எஸ். நமசிவாயம், ஜே. பி. அவர்கள்
2. திரு. ப. காசிலிங்கம், உரிமையாளர், கஜனாஸ் புடைவைமாளிகை யாழ்.

தலைமையுரை: திரு. எம். விக்னேஸ்வரன் அவர்கள்
(உப- அதிபர், யாழ். தொழில் நுட்பக்கல்லூரி)

பிரதம விருந்தினர் உரை:
டாக்டர் எம். கணேசரெட்ணம் அவர்கள்
(சத்திர சிகிச்சை நிபுணர், யாழ். அரசினர் வைத்தியசாலை)

7.15 — 8.45 சிறப்பு நிகழ்ச்சி

★ பரதநாட்டியம் ★

வழங்குபவர்:- நாட்டியக்கலாமணி நடனகலாவித்தகர் மைதிலி அம்பலவாணர் அவர்கள்

குறிப்பு: இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் 24-10-93 விஜயதசமி அன்று மாலை 3.00—5.00 மணி வரை புதிதாக இசைகற்க சேர விரும்புவோர்க்கு தான் வகுப்புகள் ஆரம்பித்துவைக்கப்பெறும். வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் சிறந்த ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப்பெறும்.

இசை ஆர்வலர்கள், அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(87470) - நேற்பணி மன்றத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு: 30 — 01 — 1964

விண்ணில் உயர்வு: 03 — 10 — 1990

## திருமதி விஜயவாணி பிரேம்நாத்

ஓடியது மூன்றாண்டு ஓயவில்லை உன் நினைவம்மா - நீ நாடியது விண்ணுறக்கம் நமக்கில்லை கண்ணுறக்கம் அன்பின் குலவிளக்காய் விஜி என்று ஆசையுடன் உனை அழைத்து ஆண்டு மூன்றானாலும் - உன் நினைவு எம்மை விட்டு என்றென்றும் நீங்காதம்மா.

உன் பிரிவால் வருந்தும்.
குடும்பத்தினர்

"லஷ்மி பவனம்"
70, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

(87478)

உ
ஓம் ஸ்ரீராம் விக்னப்ரமனே நம

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக வருஷம் புரட்டாதி பதினான்காம் பூரணை நாள் வியாழன் (30-09-93) பகல் 10.00-12.00 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

★ செல்வி சுகன்யா ★

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு செய்ய திருவருள் கைகூடியிருப்பதால் அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் குடும்ப சமேதராய் வருகை தந்து மங்கையை ஆசீர்வதிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செம்பொற்சோதி பத்தர்
(பத்தர் கடை அளவெட்டி)

"அழகாபுரி"
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

(87471)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் நிலைகள் மீது இரவு நேரத் தாக்குதலாம்

கொழும்பு, செப். 29

வட பகுதியில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது இரவு நேர விமானத் தாக்குதல்களை விமானப்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

ஸ்ரேஷ்ட இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' வார இதழ் இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

ஏற்கனவே நடத்தப்பட்ட இரண்டு இரவு நேர விமானத் தாக்குதல்கள் மிக வெற்றிகரமாக முடிந்தன என்றும்—

இரவு நேர விமானத் தாக்குதல்களை புக்காரா போர் விமானங்கள் தலைமை வகித்து நடத்துகின்றன என்றும் —

அவற்றுக்குத் துல்லியமாக பொருத்தப்பட்ட ஹெலிக் கொப்டர்கள் உதவுகின்றன என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்விரவு நேர விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# அடெல் பாலசிங்கம் சபைக்கு வந்தாரா?

## எம். பி. ஏற்படுத்திய பரபரப்பு

கொழும்பு, செப். 29

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி திருமதி அடெல் பாலசிங்கம் நாடாளுமன்றத்துக்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு ஒன்றினால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

எதிர்க்கட்சி பிரதம கொறடா ரிச்சர்ட் பத்திரன இந்த முறைப்பாட்டைத் தெரிவித்திருந்தார்.

அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி திருமதி அடெல் பாலசிங்கம் நாடாளுமன்றத்துக்கு வந்திருப்பதாகவும் இதனால் எம். பிக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் ரிச்சர்ட் பத்திரன தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றம் கூடிய போது, முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தியதாகவும் முறைப்பாட்டில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் சபைக்குத் தலைமை வகித்த குழுக்களின் பிரதித் தலைவர் ஆரியதிலக ரெக்கரவ தெரிவித்தார்.

சபைக்குத் தலைமை வகித்த குழுக்களின் பிரதித் தலைவர், இது தொடர்பாக சபையில் விடுத்த அறிக்கையில், அடெல் பாலசிங்கம் என்ற பெயருடைய ஒருவர் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் வந்திருப்பதாக ரிச்சர்ட் பத்திரன தெரிவித்த கூற்றில் எந்தவித உண்மையும் இல்லை என்று தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து பத்திரிகைகள் பரபரப்பான செய்திகளை வெளியிட்டிருந்தன. இது ஒரு சங்கடமான நிலைமையை உருவாக்கியது.

இத்தகைய விடயங்களை சபையில் கிளப்புகின்ற போது உறுப்பினர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்களைச் சபையில் கிளப்புவதற்கு முன்னர் சபைக்குத் தலைமை வகிப்பவரின் கவனத்துக்கு அதனைக் கொண்டுவருவது உகந்தது என்றும் கூறினார். (இ)

### அகதிகள் கமிட்டியின் திட்ட ஆய்வாளரான

# அமெ. பிரதிநிதி யாழ். வர

# அரசாங்கம் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 29

அமெரிக்காவில் இயங்கும் அகதிகளுக்கான கமிட்டி என்னும் அமைப்பின் திட்ட ஆய்வாளர் திரு. கிர்மன் குஷ்யா யாழ்ப்பாணம் வருவதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துவிட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இன்னல்படும் அகதிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க விரும்பம் தெரிவித்துள்ள இந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்குச் செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்பட்டதால், அவர் மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

மீண்டும் யாழ்ப்பாணம் வருவதற்கான அமெரிக்க காங்கிரஸின் அனுமதியுடன் கடந்த வாரம் கொழும்பு வந்த அந்த அமைப்பின் திட்ட ஆய்வாளர் திரு. கிர்மன் குஷ்யாவை யாழ்ப்பாணம் வர இலங்கை அரசு அனுமதிக்கவில்லை.

''அங்கு நிலைமை சீர் இல்லை; அங்கு செல்லமுடியாது'' என அரசு அவருக்கு கூறிவிட்டதாம்.

இருந்த போதிலும், திரு. குஷ்யா கொழும்பில் தமிழ் அரசியல்வாதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து யாழ் நிலைமை குறித்து அறிந்து கொண்டதாகவும் —

யாழ்ப்பாணத்துடன் தொடர்புடைய பலரைச் சந்தித்து அங்குள்ள உண்மை நிலையை கேட்டறிந்து கொண்டதாகவும் தெரியவந்தது. [ஒ-3]

## அரச அதிபருக்கு மகஜர்

வல்வெட்டித்துறை, செப். 29

கடந்த மார்ச் மாதம் முதல் நிறுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட கட்டடத் தொழிலாளர்களுக்கான நிவாரணத்தை மீண்டும் வழங்குக;

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட இமெற்றுக்கட்டட தொழிலாளர் சங்க கரவெட்டிக் கிளை — யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது. (த-155)

## பதுங்கு குழிக்குள் பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், செப். 29

விமானக் குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்கு பாதுகாப்புத் தேடி பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்தவரைப் பாம்பு தீண்டியது.

கொக்குவிலில் திங்கள் இரவு 7 மணிக்கு பயணிகள் புறப்பட்டுக்கொண்டிருந்த நேரம் இடம்பெற்ற விமானத்தாக்குதல், ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி சிதறி ஓடி பதுங்கு குழிக்குள் சென்றவர்களில் ஒருவருக்கே இக்கதி நேர்ந்தது.

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த தம்பிராசா கைலாஷ்மி (வயது 21) என்ற இளம் பெண்ணே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

# ஜனாதிபதி தேர்தலில் விஜேதுங்க போட்டி

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் திரு. டி. பி. விஜேதுங்கவே மீண்டும் போட்டியிடுவார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிந்திய நிலைப்பாட்டில் இருந்து இது தெரியவருகிறது என்று சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியில் தமது நிலையை பலப்படுத்துவதில் ஜனாதிபதி விஜேதுங்க ஈடுபட்டுள்ளார் என்றும் —

கட்சியில் உள்ள தமது எதிரணியினரைச் சமாளிக்க காமினி திஸநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ப்பதைத் துரிதப்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் —

ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவு செய்யக் கூடிய விதத்தில் அரசமைப்பில் திருத்தம் செய்யும் சாத்தியம் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் புதிய ஜனாபதியைத் தெரிவு செய்ய கூடியதாக அரசமைப்பில் திருத்தம் செய்யப்படவுள்ளது என்ற செய்தியை ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள விஜேதுங்கா எதிர்ப்பாளர்களே பத்திரிகைகளுக்கு வழங்கினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ-எ)


BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சனி, ஞாயிறு வகுப்புகள் A/L 94

மீட்டல், வினா - விடை

| ஆசிரியர் | பாடம் | சனி, ஞாயிறு நேரம் |
|---|---|---|
| S. வரதராஜன் | பௌதிகவியல் | 7-00 — 8-00 |
| பசில் | விரசாயனம் | 8-00 — 9-00 |
| S. S. மனோகரன் | அளவையியல் | 9-00 — 10-00 |
| சௌந்தி | கணக்கியல் | 10-00 — 11-00 |

ஆரம்பம்: 03 - 10 - 1993 ஞாயிறு

(இ-6147)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

எமது கல்லூரியின் பழைய மாணவனும்,

சாரணர் குழு அங்கத்தவரும்,

வலிகாமம் கல்விக் கோட்ட முதற் கரும்புலியுமான

மேஜர் புலியரசன் / புகழரசன்

(சுப்பிரமணியம் நாககீதன், அரியாலை.)

நினைவஞ்சலிக் கூட்டம்

இடம்: கல்லூரி மண்டபம்

காலம்: 01-10-1993 வெள்ளி காலை 11 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(87466) அதிபர், ஆசிரியர், மாணவர்.

BECON

யாழ்ப்பாணம்;

A/L 95

பௌதிகவியல் — திரு. சண்

புதிய பிரிவு

ஆரம்பம்:

02 - 10 - 1993

சனி 1-00 மணி

(சி-6150)

SCHOOL OF TALENT

VADDUKODDAI.

● Spoken English With Crammar. By R SIVALingam (Dip - In- Eng)

பிரிவு - 2

ஆரம்பம் இன்று (29 - 09 - 1993)

மாலை 4-00 மணி

● A/L Personal Classes நடைபெறுகின்றது

கணக்கியல் — திரு. இதி

பொருளியல் — திரு S. B. சதாகர்

அளவையியல் — திரு M. [illegible]

(6148)

மல்லாகம்

பெரியதம்பிரான் தேவஸ்தானம்

15ஆம் நாள்

அலங்கார உற்சவமும்

மகாபாரத விரிவுரை

பூர்த்தி விழாவும்

காலம்: 29 - 09 - 1993 புதன்கிழமை

முற்பகல்: 10-30 மணி சங்காபிஷேகம்

நண்பகல்: 12-00 மணி பூசை

★ மாலை நிகழ்ச்சிகள்

மாலை 6-30 மணி மகாபாரத விரிவுரை பூர்த்தி

தலைவர்: திரு. க. உமாமகேஸ்வரன் அவர்கள்

இரவு 7-30 மணி

மகாபாரத விரிவுரை நிகழ்த்திய சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்களுக்கு ''வியாசாநுக்கிரக வாசகமாமணி'' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கல்

வழங்குபவர்:

வாகீச வாரிதி சிவஸ்ரீ நா சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள் (சுன்னாகம்)

பொன்மலர் வழங்கல்:

சிவத்திரு வ. அப்புத்துரை அவர்கள் (ஆலய அர்ச்சகர்)

சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசு வழங்கல்:

வழங்குபவர்:

சிவஸ்ரீ நா சர்வேஸ்வரக்குருக்கள் (சுன்னாகம்)

இரவு 8-30 மணி:

திருவூஞ்சல் நடைபெற்று எம பெருமான் பூந்தண்டிகையில் வெளி வீதி உலா

அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து அருள் பெற்றுய்யவும்.

வ. அப்புத்துரை, ஆலய அர்ச்சகர்.

மல்லாகம். (87467)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

சாம், பிற்றாம், சதிமிலை காம் விதைகள் விற்பனைக் குண்டு; தொடர்பு: பிள்ளை யார், 851A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(27437)

கொழும்புத்துறை கிழக்கு, இல. 7, நாவாம் குறுக்குத் தெருவில் உள்ள திரு. ஐயாத்துரை பேரானந்தம் இல்லத்தில் அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (இரண்டு மாதக் குட்டிகள்) தேவையானோர் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
(27455)

வர்த்தகமும் கணக்கியலும் G. C. E. O/L வகுப்புக்கான 1986 தொடக்கம் 1993 வரை 7 வருட கடந்த கால வினா-விடை உள்ளடக்கியது. ஆக்கம்: இ. செல்வநாயகம். கணக்கியல் ரூபா 45/- வர்த்தகம் ரூபா 60/- தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(6141)

### உடன் விற்பனைக்கு

ஹறலைன் பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, மானிப்பாய்.
(27465)

### புலமைப் பரிசில் பரீட்சை

1993இல் நடந்த பரீட்சை வினா விடையும் உள்ளடக்கிய கடந்தகால வினா-விடை வந்து விட்டது. உயர்கல்வி நிலைய சேவைகள் நிலைய வெளியீடு. விலை ரூபா 85/- குறைந்தளவு பிரதிகளே உண்டு. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6183)

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-30—11-00 வரை சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர்.
(27418)

### ஆண்டு 9 கணக்கியல்

கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான வணிகமும் கணக்கியலும் துரித மீட்டல் பயிற்சிகளும் விடைகளும் கடந்த கால வினா விடைகளும். ஆக்கியோன்: த. தர்மராஜன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(27428)

### பரீட்சை (ஆண்டு - 3)

ஆண்டு 3 (புலமைப் பரிசில் 1995) மாதிரிப் பயிற்சிப் பரீட்சை (இரண்டாவது) 03-10-1993 ஞாயிறு முற்பகல் 8-00 மணி, 11-00 மணிக்கு நடைபெறும். மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(27453)

### ENGLISH

English Grammar and Literature for O/L, A/L, G. A. Q. Degree and E S L Also Tofel and Spoken English ஆரம்பம்: 1-10-93 காலை 7 மணி V. N. Kandasamy A. I. B. Parrt I (London), Inter (London) Dip - in English 87, திருநெல்வேலி றோட், ரயில் கடவைக்கு அண்மையில் கொக்குவில்.
(6568)

---

## யாழ். பல்கலைக்கழகத்திற்கான

(வெளிவாரி விரிவுரைகள்)

B. A. Part - I
B. A. Final
B. Com. - Part - I
B. Com. - Part - II

**விரிவுரைகள் ஆரம்பம்:**
**03 - 10 - 1993** (8 மணி)

நிர்வாகி எஸ். அருள்நங்கை.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-6124)

---

## தேவை

எழுதுவினைஞர், கணக்கு எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 04.10.1993க்கு முன்.

செயலாளர்,
யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை,
தர்மசேவை நிலையம்,
(நல்லை ஆதீனம் அருகே),
நல்லூர்
என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்
(27456)

---

வண்ணை மேற்கு விளையாட்டு கழகத்தின்
1ஆவது ஆண்டு விழாவையொட்டி

## மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி-1

(ஓவர் கேப்)

விண்ணப்ப முடிவு: 05 — 10 — 1993

தொடர்பு:
செயலாளர்,
வண்ணை மேற்கு வி. க.,
ஆறாசல் மடம், மானிப்பாய் வீதி;
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

தினசரி பிற்பகல் 3 மணி — 6 மணி வரை சந்திக்கலாம்.

★ விண்ணப்பக் கட்டணம் ரூபா 50/-
(27464)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 11 — 1958



மறைவு: 10 — 10 — 1992

செல்வி
## இராமநாதன் சுசிலாதேவி

திதி: 29 - 09 - 1993

"ஜீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்"

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பான தந்தை, சகோதரர், சகோதரிகள், பெறாமக்கள், உறவினர்கள்.

"ஆனந்த பதி", தேவாலய வீதி, சுன்னாகம்.
([illegible])

---

### வடக்கு - கிழக்கு பிரச்சினை:

# விஜேதுங்காவின் கூற்றுக்கு விவியன் ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, செப். 29
இனப்பிரச்சினை குறித்து ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்துள்ள பிந்திய நிலைப்பாடு சரியானதாகும் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பழம்பெரும் தலைவர்களில் ஒருவரான விவியன் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

வெளிவ பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் — "வடக்கு - கிழக்கில் நிலவுவது தீவிரவாதப் பிரச்சினை தான் என்று ஜனாதிபதி சரியாகக் கூறியிருக்கிறார்.

அவரின் செயல்முறையை மதிப்பீடு செய்து பார்க்கையில் அவரால் ஏதாவது செய்ய முடியும் என்று தெரிகிறது" — என்றும் விவியன் குணவர்த்தனா கூறியிருக்கிறார்.
(இ-ஏ)

---

யாழ். பல்கலைக்கழக

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

பொருளியல்
**S. வரதராஜன் B.A. (Hons.)**

**G. A. Q; 1st. in Com.**
பிரிவு I சனி, ஞாயிறு 4p.m.
பிரிவு II புதன், வெள்ளி 6-30 a.m.

**B. A; B. Com. Part - I**
சனி, ஞாயிறு 1-00 — 2-00 p.m.

**B. A.; B. Com. Part - II**
சனி, ஞாயிறு 3-00 — 4-30p.m.

குறிப்பு ஒவ்வொரு பாட அலகும் முடிய வினா-விடை வகுப்பு நடைபெறும்.

# BECON

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
(இ-6146)

---

**JAFFNA DISTRICT GOVT. SCHOOLS PART - TIME ENGLISH TEACHERS**

## SEMINAR & GENERAL MEETING

03 — 10 — 1993 Sunday 9 3` a.m.
யாழ். மத்திய கல்லூரி மண்டபம்
Chief Guest. MR D. R. ARUMANAYAGAM
Asst. Director of Education, J. D.

சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், பெற்றோரும் கலந்துகொள்ளலாம்;

★ பிரவேசம் இலவசம்

தலைவர்,
80, செட்டித்தெரு, நல்லூர். (J. D. G S.-P. E. T. A.)
(27460)

---

யாழ். இந்துக் கல்லூரி
**பழைய மாணவர் சங்கம்**
வழங்கும்

## முழுநிலா அறிவியலரங்கு

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 30 — 09 — 1993 (வியாழன்)
நேரம்: மாலை 3 30 மணி

3-30 — 4 15 மணி
திரு. சசி கிருஷ்ணமூர்த்தி
"திரைப்படக் கலைரசனை"

4-15 — 5-30 மணி
திரு. மு. திருநாவுக்கரசு
"சர்வதேசப் பின்னணியில் இலங்கையின் புதிய அரசியல் பொருளாதாரமும் புதிய சமூக உருவாக்கமும்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்.

ப. மா. ச.
யாழ். இ. க.
(இ-5978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### எலும்புக் கூடுகளை உருவாக்க அனுமதி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களை பயமுறுத்த ஸ்ரீலங்காப் படையினர் புதிய வழிமுறை ஒன்றைக் கையாளத் தொடங்கி இருக்கிறார்கள்!

தாம் ஏற்கனவே கைது செய்தோ அல்லது கூட்டிச் சென்றோ கொலை செய்து புதைத்த தமிழர்களின் எலும்புக் கூடுகளைக்காட்டுகின்றனர்.

கித்துக்கடாரம் என்ற பகுதியில் இப்படி ஒரு சம்பவம் அண்மையில் நடந்திருக்கிறது. அந்தப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற இரு தமிழர்களை மேற்கூறிய வகையில் படையினர் பயமுறுத்தி உள்ளனர். அப்போது பதின்மூன்று எலும்புக் கூடுகளைக் அவர்களுக்குக் காண்பித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடங்கிய பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 6,000 பேர் காணாமற் போயிருக்கிறார்கள் என்பது உத்தேச மதிப்பீடு. அவர்களில் மிகப் பலரும் இராணுவ முகாம்களுக்கு அருகில் இவ்வாறு எலும்புக்கூடுகளாக மாறியிருப்பார்கள் என்றே இப்போது கருத வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட கிழக்கின் பல பகுதிகள் படையினர் கட்டுப்பாட்டில் உள்ளதாக அரசு கூறுகிறது. அந்தப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த போதும், அதன் பின்னரும் படையினர் ஆயிரக்கணக்கான தமிழர்களைக் காணாமற் போகச் செய்தனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை!

இது குறித்து ஆராய சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை இயக்கங்களின் பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு பலதடவைகள் விஜயம் செய்ததுண்டு. அப்போது காணாமற் போனவர்கள் எண்ணிக்கை மட்டக்களப்பில் அதிகம் என்பதனை அவர்களால் அறிய முடிந்ததே அன்றி, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டுபிடிக்கமுடியவில்லை.

இத்தகைய பின்னணியில்— மட்டக்களப்பு உட்பட கிழக்கை முழுமையாகச் சுத்திகரிப்பதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா அடுத்த மாதம் ஜனவரி வரை படையினருக்கு அவகாசம் வழங்கியுள்ளார். இந்த அவகாசத்தை அவர்கள் தக்கபடி பயன்படுத்துவது என்பது மேலும் பல ஆயிரம் தமிழர்களைக் காணாமற் போகச் செய்து அவர்களின் எலும்புக் கூடுகளை காட்டுவதாகவே முடியும்!

அதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கி விட்டமை துலக்கமாகத் தெரிகிறது. ஆம். மட்டக்களப்பிலும் மற்றும் திருகோணமலை மாவட்டத்திலும், அம்பாறையில் தமிழ்க் கிராமங்களிலும் இளைஞர்கள் மட்டுமன்றி நடுத்தர வயதான தமிழர்களும் படையினரால் நாளாந்தம் கூட்டிச் செல்லப்படுகிறார்கள்.

ஒரு புறத்தில் படையினர் பாதுகாப்புடன் கிழக்கில் சிங்களக் குடியேற்றம் நடந்து வருகிறது. மறுபுறத்தில் காணாமற்போவோர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்காகத் தமிழர்கள் கூட்டிச் செல்லப்படுகின்றனர். அதற்காகவென்றே சுற்றிவளைப்புகளும், கைதுகளும் நடத்தப்படுகின்றன.

இந்த வகையில் தமிழர் இன அழிப்பும், சிங்களவர் குடியேற்றமும் மிக வேகமாகக் கிழக்கில் நடக்கின்றன. தேர்தல் நடத்துவதற்கான சுத்திகரிப்பு என்பது இவற்றை மேலும் தீவிரமாகச் செய்வதற்கான உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரமே!

★ ஓராண்டில் 3 தடவைகள் ராணுவ கட்டளைப் பீடத்தில் மாற்றம்

# போருக்கு காலவரையறை விதிப்பது முட்டாள்தனமான நடவடிக்கையாகும்

## பிரிகேடியர் நாரத விக்கிரமரத்னா பேட்டி

இலக்கு இல்லாத மோதல் — போர் முனைகள் இல்லாத ஒரு யுத்தம்'' — என்ற தலைப்பில் பிரிகேடியர் நாரத விக்கிரமரத்னா கடந்த வார சண்டே ரைம்ஸ் இதழில் எழுதிய கட்டுரையில் முக்கிய அம்சங்கள் இங்கு தொகுத்து தரப்படுகின்றன.

''கடந்த மூன்று வருடங்களாக இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களில் பணியாற்றி விட்டு கொழும்புக்கு விடுமுறையில் வரும் படை அதிகாரிகளையும் இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களுக்கு மீண்டும் செல்லும் படை அதிகாரிகளையும் கொழும்பில் நான் அடிக்கடி சந்திப்பது உண்டு.

பத்து வருடகால சண்டை— உண்மையில் ஒரு தலைமுறையாக நடக்கிறது.

போதும் போதும் என்றாகி விட்டது — நிம்மதி ஏற்பட

### நிம்மதியைத் தேடி நாடு அமைதியாக அழுகின்றது

ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று நாடு அமைதியாக அழுகின்றது.

லட்சம் டொலர் பெறுமதியான கேள்வி, அப்படியான நிம்மதி இப்போது கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா?

அச்சுறுத்தலைச் சந்திப்பதில் நாம் காட்டும் விட்டுக்கொடுக்காத போக்கு, இராணுவக் கட்டளைப்பீட கட்டமைப்பில் அடிக்கடி ஏற்படுத்தப்பட்டு வரும் மாற்றத்தில் காணமுடிகிறது.

''டெஸ்ட்'' கிரிக்கெட் போட்டிக்கான இறுதி அணியில் இடம் பெறுபவர்கள் யார் என்பதை, கிரிக்கெட் மைதானத்தில் பூவா, தலையா போட்டு பார்க்கும் வரை தெரிவு செய்ய முடியாத நிலையில் இருக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை போன்றே இராணுவத்தின் நிலைமையும் உள்ளது.

#### கட்டளைப் பீடத்தில் அடிக்கடி மாற்றம்

ஓராண்டு காலத்தில் மூன்று தடவைகள் இராணுவக் கட்டளைப் பீடத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

இப்போது புதிதாக பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக இருப்பவரின் தொழில் சார் திறமை குறித்துச் சந்தேகமே படத் தேவையில்லை. தீர்மானம் ஒன்றை எடுக்க இது போதுமானதா?

கட்டளைப்பீட கட்டமைப்பில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அனைவரின் மனங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. யார் யுத்தத்தை வழி நடத்துகிறார்? என்ற கேள்வியுடன் இந்த குழப்பம் நிலவுகிறது.

சண்டையில் ஈடுபடும் ஒருவர் நிச்சயமற்ற அபாய நிலையில் என்றும் இருக்கக்கூடாது. எதற்காக, எந்த நோக்கத்தை அடைவதற்காக சண்டை இடுகின்றோம் என்பதை அவர் தெரிந்திருக்க வேண்டும்.

அரசியல் தீர்வு ஒன்றுக்காக வடக்கு - கிழக்கைத் துப்புரவு செய்ய வேண்டும் என்று வெறுமனே சொல்லிக் கொள்வது செயல் பூர்வமான [illegible] யாகாது.

#### யுத்தம் எதற்காக?

ஒவ்வொரு யுத்தமும் ஓர் இராணுவ நோக்கத்துக்காகவும் ஓர் அரசியல் நோக்கத்துக்காகவும் நடத்தப்பட்டதாகவே அனைத்து யுத்தங்களின் வரலாறுகளும் நிரூபித்துள்ளன.

இந்த நீண்ட யுத்தத்தின் இராணுவ நோக்கம் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அதிகாரிக்கும் தெரியும்; ஆனால் இந்த யுத்தத்தின் அரசியல் நோக்கம் பற்றி ஒவ்வொரு மனிதனும் அதிகாரியும் குழப்பம் அடைந்துள்ளார்.

காலத்துக்குக் காலம் உதவும் நாடுகள், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் நிர்ப்பந்தம் காரணமாக அரசியல் நோக்கத்தில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் முன்னணி பாதுகாப்பு நிலையில் உள்ள அதிகாரிகளும் மற்றும் மக்களும் ''எதற்காக நாம் சண்டையிடுகின்றோம்'' — என்று தங்களுக்குத் தாங்களே கேட்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

விடுமுறையில் வந்த அதிகாரி ஒருவரைச் சந்தித்த, போரின் முன்னேற்றம் பற்றிக் கேட்டேன்.

#### சண்டை குறித்து சிந்திக்க வேண்டும்

''நாம் எமது உயிருக்காக சண்டையிடுகின்றோம்'' என்று அந்த அதிகாரி பதிலளித்தார். இதுதான் படை அதிகாரி மற்றும் மனிதர்களின் மனநிலை என்றால்,

### அரசியல் நோக்கம் கொண்ட தேசியத் திட்டம் அவசியம்

இச்சண்டை குறித்து ஒவ்வொரு கோணத்திலும் நாம் கடுமையாகச் சிந்திக்கவேண்டும். படையினரை நகர்த்தல், வழி நடத்தல், நிர்வாகம், [illegible] மற்றும் இலக்கு நோக்கிய பயிற்சி ஆகிய கோணங்கள் குறித்தே நாம் சிந்திக்க வேண்டும்.

''எங்கள் உயிர்களுக்காக சண்டையிடுகின்றோம்''— என்பதான அந்த உணர்வு, நம்பிக்கையீனத்தையும் மனவெறுப்பையுமே காட்டுகின்றது.

'நாட்டுக்காகச் சண்டையிடுகின்றோம்' என்ற உணர்வு இருக்குமானால், அது உயர் மனோதிடத்தையும் இலட்சிய வேட்கையையும் எதிரியுடனான ஒவ்வொரு மோதலிலும் வெற்றியீட்டவேண்டும் என்ற வேட்கையயுமே காட்டும்.

இது ஏற்படவேண்டுமானால் தெளிவாக விவரிக்கப்பட்ட அரசியல் நோக்கம் கொண்ட தேசியத் திட்டம் ஒன்று வெளியிடப்படுதல் வேண்டும்.

இதைத்தான் படை அதிகாரிகளும் மக்களும் எதிர்பார்க்கின்றார்கள். அவர்களுக்கு விவரமான அரசியல் நோக்கம் ஒன்றை வழங்க வேண்டுமே தவிர வடக்கு— கிழக்கில் தேர்தல் நடத்த வேண்டும் என்ற மேலோட்டமான தத்துவத்தை அல்ல.

சோம் யுத்தத்தில் இருந்து இரண்டாம் உலக மகா யுத்தம் [illegible] அழிவு தொடக்கம் வியட்நாம், போக்லந்து, வளைகுடா மற்றும் எமது வெற்றிலைக்கேணி யுத்தம் வரை இராணுவ— அரசியல் நோக்கம் ஒன்று இருந்தது.

நாம் எதற்காகச் சண்டையிடுகிறோம் என்று ஒருவருக்குத் தெரிந்திருந்தால் மட்டுமே அவரிடம் இருந்து அர்ப்பணிப்பையும் திடசித்தத்தையும் எதிர்பார்க்க முடியும்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா 5 லட்சத்துக்கு அதிகமான படையினரை பயன்படுத்தியது. வியட்நாமில் அமெரிக்க இராணுவம் வெற்றியீட்டவில்லை என்றே எந்த அமெரிக்க இராணுவ ஜெனரலும் கூறுவார்.

1974 இல் வியட்நாமில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறியபோது அமெரிக்கப் படையினரில் 40 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

#### இந்திய படையால் வெற்றியீட்ட முடிந்ததா?

பிரயோசனமில்லாத யுத்தம் என்பதை உணர அமெரிக்கா 40 ஆயிரம் படையினரை இழக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்தில் ஓர் இரவில் ஒரு டிவிஷனுக்கு அதிகமான படையினரைக் குவித்த இந்திய அமைதிகாக்கும் படையினரால் வெற்றியீட்ட முடிந்ததா?

இன்று வடக்கு - கிழக்கு யுத்தத்தை நடத்த மேலும் 10 படையணிகள் திரட்டப்படுவதாக நாம் கேள்விப்படுகின்றோம்.

இப்பத்துப் படையணிகளுக்கும் பயிற்சி வழங்கி சண்டையிட அனுப்பப்படுவதற்கான கட்டமைப்பு ஒன்று தேவைப்படுகிறது. எங்கே இருந்து இந்தக் கட்டமைப்பைக் கண்டு பிடிப்பது?

தாய்ப்படையணிகளிடம் இருந்துதான் இந்தக் கட்டமைப்பு வரவேண்டும். தற்போதைய இழப்பு வீதத்தின்படி, தாய்ப்படையணிகள் எல்லாம் பலம் குறைந்த நிலையில் உள்ளன. பலம் குறைந்த நிலையில் உள்ள தாய்ப்படையணிகள் புதிதாகத் திரட்டப்பட்டுள்ள 10 ஆயிரம் பேரையும் பயிற்றுவிக்க போதனையாளர்களை ஒருபோதும் அனுப்பி வைக்கமுடியாது.

மீள்பயிற்சி, மறுசீரமைப்பு மற்றும் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையற்ற நிலையில்தான் பலம் குறைந்த இத்தாய்ப் படையணிகள் போர் முனையில் நிறுத்தப்பட்டுள்ளன.

புதிதாகப் படையினருக்குப் பயிற்சியளிக்க, பயிற்சி நிறுவனங்கள், சொந்தமாகவே அதற்குரிய பயிற்சியாளர்களைப் பெறவேண்டும். இவர்களை எங்கிருந்து பெறுவது?

#### பிடிக்குள் விழுகிறோம்

இதன் பலன்— மேலதிகமாகத் திரட்டப்பட்ட படையினருக்கு பயிற்சிக் கட்டமைப்பு ஏதுமின்றி, பயிற்சியளிக்க வேண்டிய சுமையை பயிற்சி நிறுவனங்கள் ஏற்கவேண்டிய நிலை ஏற்படும். இதனைத்தான் நாம் செய்யவேண்டும் என்று தீவிரவாதிகளும் விரும்புகிறார்கள். நாம் தீவிரவாதிகளின் பிடிக்குள் விழுகின்றோம். பயிற்சியற்ற படையினரை தீவிரவாதிகளுக்கு இலகுவாக பலியாக்குகின்றோம்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா இதனைத்தான் செய்தது. அமெரிக்க ராணுவம் அதனால் பேரிழப்பை அடைந்தது. அதை நோக்கித்தான் நாம் சென்று கொண்டிருக்கிறோமா? அமெரிக்க அனுபவம் இலங்கையால் தாங்க முடியாததாக இருக்கும்.

#### காலவரையறை விதிப்பது முட்டாள்தனம்

கிழக்கை டிசம்பருக்கு முன்னும், வடக்கை ஜூனுக்கு முன்னும் சுத்திகரிக்கவேண்டும் என்றும் ஒருவர் காலவரையறை விதிப்பது ''வெற்று வேட்டு'' போர் முறையில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பதையே காட்டுகிறது. இப்படியான காலவரையறை முட்டாள்தனமான நடவடிக்கையாகும்.

ஒரு காலவரையறைக்குள் யுத்தம் ஒன்றில் வெற்றிகாண முடியுமானால் படைப்பயிற்சி பாடசாலைகளின் பாடவிதானங்களில் இருந்து இந்த அம்சத்தை நீக்கவேண்டும்.

காலம் பிந்திய இத்தருணத்திலாவது— இராணுவ நோக்கை அடைவதற்கான இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்ற முடிவு எடுக்கப்படுமானால், கால வரையறை விதிக்காது இராணுவ ஜெனரல்களுக்கு தெளிவான அரசியல் நோக்கம் எது என்பதை விளக்குவதுடன் அந்த வரையறைக்குள் யுத்தத்தை நடத்த அவர்களுக்கு அனுமதியும் வழங்கவேண்டும்.

—இவ்வாறு அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-ள)

### நந்தாவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நந்தாவில் இராசு மகாலோகேஸ்வரன் தர்மஇந்திரா குண்டு வீச்சில் ஒரு காலை இழந்துள்ளார்.

★ குருநாதர் நகேஸ்வரி (வயது 55) — தையிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து நந்தாவிலில் வசித்தவர்.

★ அமிர்தலிங்கம் லட்சும்மா (வயது 55) — வளலாயிலிருந்து இடம்பெயர்ந்து கொக்குவிலில் வசித்தவர். இவர் கணவர் குண்டு வீச்சில் காயமுற்றார்.

குண்டுவீச்சின் பின் நந்தாவில் அம்மன் கோயிலின் முன் மண்டபம் ஒரே இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. ஆங்காங்கே மனித உடல்களின் சதைத் துண்டங்களும் சிதறிக்கிடக்கக் காணப்பட்டன. காயப்பட்டவர்களை எடுத்துச் சென்ற ஒழுங்கையிலும் நீண்ட தூரத்திற்கு இரத்தம் சிந்திக் காணப்பட்டது.

சியாமாசெட்டி விமானங்கள் தாக்குதல் நடத்திச் சென்றதும் — சற்றுநேரத்தில் — இரு புக்காரா விமானங்கள் அப்பகுதியில் வட்டமிட்டு தாக்குதல் நடத்த எத்தனித்தன. ஆனால் தரையிலிருந்து புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியதை அடுத்து அவை தமது முயற்சியைக் கைவிட்டு பறந்துசென்றன.

**நீர் இன்றேல் ஏர் இல்லை**
**ஏர் இன்றேல் சோறில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுங்குகுழி இடிந்து பலியான 20 பேர்

சங்கத்தானையில் பதுங்கு குழியுடன் மூடப்பட்டு மரணமான இருபது பேரில் ஒன்பது பேரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியிலும் எஞ்சியோரின் சடலங்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் அடையாளம் காணப்பட்டன. உயிரிழந்தோர் விபரம் வருமாறு:-

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சுந்தரம் செல்வராஜா (40 வயது- மரக்காலை உரிமையாளர்), அவரது மனைவியோதா செல்வராஜா (17 வயது), சுஜாந்தா செல்வராஜா (16 வயது)

மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சாந்தி ஜெகதீஸ்வரன் (வயது 30), அவரது பிள்ளைகளான ஜெ. ஜனனி (வயது 7), ஜெகதீஸ்வரன் தசாயினி (வயது 11), ஜெகதீஸ்வரன் நிரோஸ் (வயது 8)

சகோதரிகளான கபாலினி கோபாலரட்ணம் (வயது 15), சுரேகா கோபாலரட்ணம் (வயது 10)

சகோதரிகளான சின்னராசா நிரஞ்சனி (வயது 18) சின்னராஜா (பவானி வயது 21), சின்னராசா சபிரபா (வயது 10),

பாலசந்தரம் சுரேஷ் (வயது 18) இச்சிறுவனின் தங்கையான பாலசுந்தரம் ரதி (வயது 3),

தங்கராஜா சுசிலா (வயது 18), கணபதிப்பிள்ளை தங்கம்மா (வயது 56), செல்லையா மகேஸ்வரி (வயது 40), கோபாலபிள்ளை சுதர்சன் (வயது 9), கணேசன் கௌசிகா (வயது 18), ரஞ்சன் கோபால் சுதர்சன் (வயது 11)

பதுங்கு குழிக்குள் இருந்து மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோர் விபரம்:-

★ செல்வராஜா மங்கை யர்க்கரசி (வயது 38) இவரது கணவனும் இரு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்)

★ மகாலிங்கம் மோகன் (வயது 20)

★ பொன்னுத்துரை மேகநாதன் (வயது 16)

★ வை. விஜயகுமார் வயது 15) (உ-5-9-15)

## நாளை

யாழ். இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினர் "செம்மை ஆழியான்" க. குணராசா கலாநிதிப் பட்டம் பெற்றதைப் பாராட்டுமுகமாக ஒன்று கூடல் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் யாழ். இலக்கிய வட்டத் தலைவர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். (க)

o o o

மௌனகுரு முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் வருடாந்த மகாசமாதிக் குருபூசை நாளை வியாழக்கிழமை மறவன்புலோசுத்தசைவசன்மார்க்க சாது சங்கத்தில் மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். (ஓ)

o o o

செவிப்புலனற்றோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அல்வாய் இழக்கு (சதா பொன்னு) வடமராட்சி கடல் வள முன்னேற்ற சங்கத்தில் நடைபெறும். (க)

## சேவை இல்லை

யாழ்ப்பாணம், செப். 29

கிளாலி—பூநகரி படகுச் சேவை நேற்று நடைபெறவில்லை.

இதனையடுத்துப் பயணிகளில் ஒரு தொகுதியினரும், படகோட்டிகளும் அங்கிருந்து திரும்பி வந்தனர்.

## சங்கத்தானையில் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழைய மின்சார சபைக் கட்டடத்தின் மீது வீசப்பட்ட இரு குண்டுகளால் அந்தக் கட்டடம் தரைமட்டமானது. சூழ இருந்த வீடுகள் பலத்த சேதமடைந்தன.

மின்சார சபைக் கட்டடத்துக்கு சுமார் நூறு யார் தொலைவில் மேலும் இரு குண்டுகள் வீசப்பட்டன. குடியிருப்புக்கள் இடையே நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலினால் பல வீடுகள் சேதமடைந்தன.

மூன்றாவது குண்டு வீச்சுத் தாக்குதல் சங்கத்தானை சாரதா வீதி (2 ஆம் குறுக்குத் தெரு) பகுதியில் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டது. புக்காரா வீசிய இரு குண்டுகள் வீடு ஒன்றின் மீது விழுந்து வெடித்ததில் அந்த வீடு இருந்த இடம் தெரியாமல் அழிந்தது. வீடு இருந்த இடத்தில் சுமார் 25 அடி ஆழமான பாரிய குழி ஒன்று மட்டும் காணப்படுகிறது.

அருகில் இருந்த பல வீடுகள் பலத்த சேதமடைந்தன. சேதமடைந்த வீடுகளின் இடிபாடுகள் அங்கும் இங்குமாகச் சிதறிக் காணப்பட்டன.

அதேபகுதியில் சாரதா வீதியில் அமைந்துள்ள மரக்காலை ஒன்றின் நடுவே நாலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. குண்டு விழுந்து வெடித்தபோது அருகில் இருந்த பதுங்கு குழி ஒன்றினுள் பாதுகாப்புத்தேடி இருந்த பலர் மண்ணுள் புதையுண்டு மரணமாகினர்.

மரக்காலையின் மரத்தூள் போடுவதற்கு அமைக்கப்பட்டிருந்த "கொன்கிறீட்" இடமே பதுங்கு குழியாக மாற்றப்பட்டிருந்தது. அது மரங்கள் அரிந்து வரும் புறவெட்டு போன்றவற்றினால் மூடப்பட்டிருந்தது.

பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 25 பேர்வரை அந்தப் பதுங்கு குழியினுள் தஞ்சமடைந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

குண்டு விழுந்து வெடித்த இடத்தில் சுமார் இருபதுஅடி ஆழமுள்ள பாரிய கிடங்கு காணப்படுகிறது. அந்தப் பாரிய கிடங்கின் ஓரமாக பதுங்குகுழி இடிந்து மண்ணால் மூடப்பட்டுக் கிடந்தது.

குண்டு வீச்சால் பதுங்குகுழி இடிந்து ஒரு மணி நேரத்தின் பின் மக்களால் பதுங்கு குழி தோண்டப்பட்டபோது உள்ளேயிருந்து சடலங்கள் மீட்கப்பட்டன. நால்வர் பலத்த உபாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

விருந்த சிரமத்தின் மத்தியில் வெளியே எடுக்கப்பட்ட சடலங்களுடன் காயமுற்றோர் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

### மயானக் காட்சி

சாவகச்சேரியில் நேற்று புக்காரா விமானங்களின் மூர்க்கத்தனமான குண்டுவீச்சுக்கு இலக்கான இடங்கள் மயானம்போலக் காட்சியளித்தன.

சங்கத்தானை சாரதாவீதிப் பகுதியில் வீடுகள் எங்கும் மரண ஓலமே கேட்டுக்கொண்டிருந்தன.

புக்காரா விமானங்கள் சுமார் அரைமணி நேரம் நடத்திய வெறியாட்டத்தில் அந்தப்பகுதி ரணகளமாகியது.

பதுங்கு குழியுடன் புதையுண்டவர்கள் யார் எவர் என்று அறியாத நிலையில் அப்பகுதி மக்கள் அல்லோலகல்லோலப்பட எங்கும் மரண ஓலம் எழுந்தது.

உயிரிழந்தவர்களில் 11 பேரின் உடல்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்பட்டன. தங்கள் உறவினர்களை அடையாளம் காண்பதற்காக நேற்று மாலை அங்கு இரண்டு மக்கள் [illegible] (உ-5-9-15)

★ தமிழகத்தில்

## ஹர்த்தாலின்போது சூடு இரு மீனவர் மரணம்

சென்னை, செப். 29

தமிழகத்தில், ஹர்த்தால் நடத்திய மீனவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

காயிதே மில்லத் மாவட்டம் — நாகப்பட்டினத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 66 ஊர்களைச் சேர்ந்த மீனவர்கள் ஹர்த்தால் ஒன்றை நடத்தினர்.

இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து மீனவர் சங்கம் இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தது.

ஹர்த்தாலின் போது நடந்த ஆர்ப்பாட்டங்கள் கட்டுக்கடங்காமல் போகவே பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அப்போது இரு மீனவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சென்னையிலிருந்து மாநில அமைச்சர்கள் இருவர் நாகைக்கு விரைந்தனர்.

இவ்விவகாரம் குறித்துப் பேசுவதற்காக தமிழக தலைமைச் செயலாளர் டி. வெங்கட்ராமனை புதுடில்லிக்கு வருமாறு மத்திய அரசு அழைத்துள்ளது. (அ-த-எ-5)

## சேகு தாவூத் அடுத்தவாரம் ஐ. தே. கவில் சேருவார்?

மட்டக்களப்பு மாவட்ட சுயேச்சை எம். பி. சேகு தாவூத் அடுத்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வார் என்றும்—

அதனைத் தொடர்ந்து அவர் ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும்—

ஸ்ரீகோதா வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டிருக்கிறது.

1989 தேர்தலில் ஈரோஸ் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு 14 இடங்களைக் கைப்பற்றியது.

பின்னர் தெரிவு செய்யப்பட்டவர் பதவி விலகவே, வெற்றிடங்களில் ஒன்றுக்கு சேகு தாவூத் நியமிக்கப்பட்டார்.

கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்டம் சுயேச்சை எம்பிக்களுக்கு பொருந்தாது என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் அவர் ராஜாங்க அமைச்சராகப் பதவி ஏற்பார். (இ-எ)

## பொருள் விநியோகத்தில் குளறுபடி அதிகாரி தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், செப் 29

மக்களுக்கு விநியோகிப்பதற்கு வழங்கப்பட்ட பொருள்கள் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கூடிய விலைக்கு விற்கப்பட்டது தொடர்பாக சங்கத்தின் முக்கிய பதவியில் உள்ள ஒருவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார்,

மக்களுக்கு கிலோ 18 ரூபாவுக்கு மேற்படாமல் விற்க வேண்டும் என்ற அறிவுறுத்தலுடன் யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளரால் கிலோ 15 ரூபா 90 சதப்படி வழங்கப்பட்ட வெள்ளைநாடு அரிசி பொதுமக்களுக்கு கிலோ இருபது ரூபா வீதம் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும்—

மாணவர் உணவு முந்திரைக்கு தரமான பொருள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தும் — தரமான பொருள்களை விநியோகத்துக்காக ப.நோ.கூ.ச வுக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும் — தரம் குறைந்த பழுதடைந்த பொருள்கள் மாணவருக்கு விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்து விரைவாக விசாரணை நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## இயக்கச்சி ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை முதல் மாலை வரை படையினரின் விமானங்களும் இயக்கச்சி, பளை, அல்லிப்பளை, புலோப்பளை, கிளாலி, முகமாலை, சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதிகளில் பரவலாக குண்டு வீச்சு, றொக்கட், தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களில் ஈடுபட்டனர்.

வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த வாகனங்களையும் துரத்தி புக்காரா, மற்றும் ஹெலிக்கொப்டர்கள் தாக்குதலை மேற்கொண்டன.

கிளாலிக்கரையோரப் பகுதியில் புக்காரா மேற்கொண்ட றொக்கட் தாக்குதலில் பொருள்கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த சின்னையா சிவஞானம் (வயது 25) — நாவாந்துறை, செல்லையா சுந்தரம் (வயது 21) — கெற்பலி, சாவகச்சேரி வெளிய மாவடியில் றொக்கட் தாக்குதலில் மயில்வாகனம் புனிதவதி (வயது 65), அவரது மகள் பாலச்சந்திரன் கலாவதி (வயது 36) ஆகியோரும் —

பளைப் பகுதியில் வீதியால் வந்து கொண்டிருந்த டிராக்டரை நோக்கி மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலில் டிராக்டர் ஓட்டி வந்த சாரதி சுந்தையா இரசதுரை (வயது 38) — மட்டுவில் ஆகியோர் காயமடைந்தனர்.

நேற்று மாலை வரை ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

நேற்று முன்னிரவிலும் புக்காரா விமானங்கள் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

## வவுனியாவிலும் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், செப். 29

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் வவுனியா மாவட்டம் பூவரசம் குளம் பகுதியில் உள்ள குருக்களூர் என்ற இடத்தில் புக்காரா விமானம் ஒன்று தாக்குதல் நடத்தியது.

## வீடியோ சஞ்சிகை

யாழ்ப்பாணம், செப். 29

நிதர்சனம் அமைப்பு தயாரித்து வழங்கும் "ஒளிவீச்சு" மாத வீடியோ சஞ்சிகை வெளிவந்துள்ளது. மேற்படி வீடியோ சஞ்சிகையின் படக்காட்சி இன்று மாலை 6 மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தின் அமலன் அரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

கடற்கரும் புலிகளின் தாக்குதல்கள் பற்றிய சிறப்புச் செய்தியும், மற்றும் வழமையான அம்சங்களும் அந்த வீடியோ சஞ்சிகையில் இடம் பெற்றுள்ளன. (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சொக்கலிங்கம் நாகம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது வட்டுக்கச்சியில் வசித்தவருமாகிய சொக்கலிங்கம் நாகம்மா (24-09-1993), வெள்ளிக்கிழமை வட்டுக்கச்சியில் காலமாகி விட்டார்.

அன்னார் ச. சொக்கலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), சௌந்தர நாயகி, சிவகாம சுந்தரி, சாரதாம்பாள் (ஆசிரியை), சிவகுருநாதன், சாவித்திரிதேவி, சிவானந்தவல்லி, சகுந்தலா தேவி (ஆசிரியை), சதாசிவன் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, இராசேந்திரம், பத்மநாதன், உலகேஸ்வரி, மகாலட்சுமி, விக்னேஸ்வரலிங்கம், காலஞ்சென்ற சிவபாதம், தவராசா, கனகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுக்கச்சியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. ஜெயதாசன்
(பேரன்)

27, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(27470)

## வைத்திலிங்கம் முருகேசு

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் முருகேசு காலமானார்.

இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் தவமணிதேவி, சுந்தரலிங்கம் (தொலைத்தொடர்பு பரிசோதகர் — மட்டக்களப்பு), சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம் (எழுபூமி), தேவரேணுகா (தொலைபேசி இயக்குநர்) ஆகியோரின் மாமனாரும், சம்பிகா, விபிசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று நண்பகல் நடைபெறும்.

தகவல்:
சு. சிவசுப்பிரமணியம்
(மருமகன்)

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(27475)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org